செய்தி வெளியீடு எண் :054 நாள் : 08.01.2024

## செய்தி வெளியீடு

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு இ–சேவை (e–Sevai) மையம் வழியாக உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பித்தல் வசதி மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் பயணிக்க முன்பதிவு செய்யும் ஆன்லைன் முன்பதிவு திட்டத்தில், குலுக்கல் முறையில் பயணிகளை தேர்வு செய்து பரிசு அளித்தல் ஆகிய திட்டங்கள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்களால் இன்று (08.01.2024) துவக்கி வைக்கப்பட்டது.**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெறும் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதிப் பொறுப்பாட்சியின் மூலம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தங்களது உயிர்வாழ் சான்றிதழை, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை, ஓய்வூதியதாரர்கள் பணியாற்றிய போக்குவரத்துக் கழக மண்டல அலுவலகத்திலும் மற்றும் அந்த போக்குவரத்துக் கழக பணிமனையிலும் நேரடியாக சென்று சமர்ப்பித்து வருகிறார்கள்.

ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களின் வயது முதிர்வினை கருத்தில் கொண்டு வருகின்ற ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 முடிய ஓய்வூதியதாரர்கள், தமிழ்நாடு அரசின் இ–சேவை மையத்தில், தங்களது கைரேகையை பதிவு செய்து அதன் மூலம் உயிர்வாழ் சான்றிதழை (Life Certificate) சமர்ப்பிக்கலாம். இனி வருங்காலங்களில் இம்முறையே நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தினால் 65498 ஓய்வூதியதாரர்களும், 25420 குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயன் அடைவார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொலை தூர பேருந்துகளில், பொதுமக்கள் எவ்வித சிரமுமின்றி பயணம் செய்ய ஏதுவாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in, செயலி etc., மூலம் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறை செயல்பட்டு வருகின்றது. நாள் ஒன்றுக்கு சுமார் 19,000 பயணிகள் இத்திட்டத்தின் மூலம் முன்பதிவு செய்து வருகின்றனர்.

வார விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து இதர நாட்களில் முன்பதிவு செய்து பயணிகள் எளிதாக பயணம் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு மாதத்திலும் அது போன்ற நாட்களில் பயணிப்பதற்காக, முன்பதிவு செய்யும் பயணிகளில் மூன்று நபர்கள் கணினி மூலம் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, மூன்று பயணிகளுக்கு தலா ரூ.10,000/- வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தினால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில், வார விடுமுறை நாட்கள் மற்றும் பண்டிகை நாட்களை தவிர்த்து சாதாரண நாட்களில் அதிக பயணியர் முன்பதிவு செய்து பயன் பெறுவர். இத்திட்டம் ஜனவரி 2024 மாதம் முதல் அமல்படுத்தப்படும்.

இத் துவக்க விழாவில், போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர், திரு.கே.இளங்கோவன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக ஓய்வூதிய நிதிப் பொறுப்பாட்சி நிர்வாகி திருமதி. கி.பாமா மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in